ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2036/4 - 2017 සැප්තැම්බර් මස 11 වැනි සඳුදා - 2017.09.11

2036/4 ஆம் இலக்கம் - 2017 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 11 ஆந் திகதி திங்கட்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி III - காணிகள்

### காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க் காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:**

வடமேல் மாகாணம், குருநாகல் மாவட்டம், பொல்கஹவெல பிரதேச செயலாளர் பிரிவில், உடபொல ஓதொட்ட கோரளையின் சிறு பிரிவில் கஹதிவல கிராமத்தில் நில அளவையாளர் நாயகத் தினால் அளந்து குறிப்பிடப்பட்ட ஓ. 2369ஆம் இலக்க 2017.08.14 ஆந் திகதியிடப்பட்ட பிரதான அளவிடைப்படத்தில் கீழ்க் காணும் அளவுகளையும் கொண்ட காணித் துண்டு.

**துண்டு இல. 1**

காணியின் பெயர்: கெஹெல் எல்லே கும்புர; உரிமை கோருவோர்: இல. 110, ஒருலித்த, பொல்கஹ வெல முகவரியில் வதியும் எம். டி. எம். தௌபீக், இல. 208, கேகாலை வீதி, பொல்கஹவெல, முகவரியில் வதியும் எம். எஸ். மொஹம்மது, இல. 15, ஒருலியத்த, பொல்கஹவெல முகவரியில் வதியும் எஸ். சஹாப்தீன்; விஸ்தீரணம்: 0.3023 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரமளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2017 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 27 ஆந் திகதி மு. ப. 10.00 மணிக்கு, பொல்கஹவெல பிரதேச செயலகத்தில் என்முன்பாக வெளிப்படுத்தும் படியும்,

மேலும், அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தை களின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற் கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்டஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும், 2017 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 25 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இருபிரதிகளாக எனக்கு அறிவிக்கும் படியும் இத்தால் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

டீ. அனோமா திசாநாயக்க,
பிரதேச செயலாளர்,
பொல்கஹவெல.

பிரதேச செயலகம்,
பொல்கஹவெல,
2017, செத்தெம்பர் 07.

9 - 661

1A - G 26242 - 27 (2017/09)

*இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

திருத்தம்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

குறிப்பு இல.: நுவ/3/1/8/கா.எ/111/18ஈ.

காணி அமைச்சின் குறிப்பு இல.: எல்டி/05/2006/CEB/278ஈ

இல. 1693/6 உம் 2011, பெப்புருவரி மாதம் 14 ஆந் திகதியுமுடைய அதிவிஷேச வர்த்தமானப் பத்திரிகை யில் அறிவிக்கப்பட்ட அறிவித்தலின் பகுதி III இல் 3A பக்கத்தில் குறிப்பிடப்பட்ட 7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தலில் இல. 50 இல் துண்டு இல. 50 இற்காக 9A பக்கத்தில் கடைசிப்பகுதி கீழே காட்டப்பட்டவாறு திருத்தம் செய்யப்பட்டுள்ளது.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரமளிக் கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2017 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 16 ஆந் திகதி மு. ப. 10.00 மணிக்கு, நுவரெலியா பிரதேச செயலகத்தில் என்முன்பாக வெளிப்படுத்தும்படியும், மேலும், அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்டஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப் பட்ட விபரங்களையும், 2017 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 09 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் முப்பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

எஸ். பீ. கே. போதிமான்ன,
பிரதேச செயலாளர்,
நுவரெலியா.

பிரதேச செயலகம்,
நுவரெலியா,
2017, ஓகத்து 30.

9 - 662